‘வடசபரி’ என்று அழைக்கப்படும் சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்ப சுவாமி கோயிலில் நேற்று நடைபெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்வில் திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். (உள்படம்) சிவாச்சாரியார்கள், கோபுர கலசங்கள் மீது புனித நீரை ஊற்றுகின்றனர். படங்கள்: எஸ்.சத்தியசீலன்

ராஜா அண்ணாமலைபுரத்தில்

ஐயப்பன் கோயில் கும்பாபிஷேக விழா கோலாகலம்

● ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்

● சென்னை

சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள ஐயப்பன் கோயில் கும்பாபிஷேக விழா விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இதில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

‘வடசபரி’ எனப் போற்றப்படும் சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் பரிவார தெய்வங்களுடன், பதினெட்டு படி மீது சுவாமி ஐயப்பன் அருள்பாலிக்கிறார். இக்கோயிலில் கன்னிமூல கணபதி, நாகராஜர், சின்ன கருப்பர், பெரிய கருப்பர் சந்நிதிகளும் உள்ளன. தற்போது ரூ.4.50 கோடி செலவில் புதிதாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு விநாயகர், ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, புதுப்பொலிவுடன் கட்டப்பட்டுள்ளன. கோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு, தங்க முலாம் பூசப்பட்ட கலசங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து, இக்கோயிலின் 4-வது கும்பாபிஷேக விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த 24-ம் தேதி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, தனபூஜை, மஹாகணபதிஹோமம், நவக்கிரக ஹோமம், மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை, வாஸ்து சாந்தி ஹோமம் ஆகியவை நடத்தப்பட்டு, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து, ம்ருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கலாகர்ஷனம், கடஸ்தாபனம் ஆகியவற்றுடன் யாகசாலை பூஜையும் தொடங்கியது.

25-ம் தேதி விசேஷசந்தி, திரவியாஹுதி நடைபெற்றன. தொடர்ந்து 26-ம் தேதி வரை 5 கால யாகசாலை பூஜைகளும் நடைபெற்றன. 24-ம் தேதி முதல் வேதபாராயணம், தேவார இன்னிசை, கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

இந்நிலையில், கும்பாபிஷேக நாளான நேற்று காலை 7.15 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம், 6-ம் கால யாகசாலை பூஜை நடைபெற்றன. 9.30 மணிக்கு மஹா பூர்ணாஹுதி, 10 மணிக்கு கடம் புறப்பாடு தொடங்கியது. காலை 10.45 மணிக்கு கோபுர கும்பாபிஷேகம், மூலவர் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சபரிமலை தந்திரி பிரம்மஸ்ரீ கண்டரரு மோகனரு, பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சை குருக்கள் ஆகியோர் தலைமையேற்று, கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். வேத மந்திரங்கள் முழங்க, ஐயப்பன் கோயிலின் மூலஸ்தான விமான கலசம் மற்றும் பரிவார தெய்வங்களின் விமான கலசங்கள் மீது புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திரளாக கூடியிருந்த பக்தர்கள், ‘சுவாமியே சரணம் ஐயப்பா’ என்று கோஷம் எழுப்பி, தரிசனம் செய்தனர். அவர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. மஹா தீபாராதனைக்கு பிறகு, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு வெள்ளி ரதத்தில் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

ஐயப்பன் கோயில் கும்பாபிஷேக விழாவில், கும்பாபிஷேக திருப்பணி குழு தலைவர் ஏ.சி. முத்தையா மற்றும் குமாரராணி மீனா முத்தையா, ஏ.ஆர்.ராமசாமி உள்ளிட்ட அறங்காவலர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

வடசென்னையில் வேட்புமனு தாக்கலின்போது வாக்குவாதம்

அமைச்சர் சேகர் பாபு மீது அதிமுக வேட்பாளர் புகார்

சென்னை காவல் ஆணையரிடம் மனு அளித்தார்

● சென்னை

வேட்புமனுத் தாக்கலின் போது ஏற்பட்ட வாக்குவாதம் தொடர்பாக, அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்ட 7 பேர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, சென்னை காவல் ஆணையரிடம் வடசென்னை தொகுதி அதிமுக வேட்பாளர் மனோகர் புகார் அளித்துள்ளார்.

இதுகுறித்து, அதிமுக வேட்பாளர் மனோகர், சென்னை காவல் ஆணையரிடம் அளித்துள்ள புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

நான் கடந்த 25-ம் தேதி அதிமுக சார்பில், வடசென்னை தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்தேன். இதற்காக, அன்றைய தினம் பகல் 11.50 மணிக்கு மண்டலம்-5 அலுவலகத்துக்குச் சென்றேன். அப்போது, எனக்கு வேட்புமனு தாக்கல் செய்வதற்கு வழங்கப்பட்ட வரிசை எண்-7.

என்னை மனுத்தாக்கல் செய்ய தேர்தல் அதிகாரி அழைத்த போது எனக்குப் பின்னால் பகல் 12.20 மணிக்கு வந்த திமுக வேட்பாளர் கலாநிதி வீராசாமி மற்றும் அவருடன் வந்த அமைச்சர் சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, மாதவரம் சட்டப் பேரவை உறுப்பினர் சுதர்சனம், பெரம்பூர் சட்டப் பேரவை உறுப்பினர் ஆர்.டி.சேகர், நகர திட்டமிடல் தலைவர் இளைய அருணா மற்றும் வழக்கறிஞர் மருது கணேஷ் ஆகிய 7 பேர் எங்களைத் தள்ளி விட்டு உள்ளே சென்று, ‘நாங்கள்தான் ஆளும் கட்சி. நாங்கள் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பு தான் நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும்’ என்று கூறி தேர்தல் அதிகாரி முன்பு அமர்ந்து எங்களுக்கு அமர இடம் தராமல் சுமார் 2 மணி நேரம் வாக்குவாதம் செய்தனர்.

பிறகு, தேர்தல் அதிகாரி வருகைப் பதிவேட்டை ஆய்வு செய்து, சிசிடிவி காட்சிகளைப் பார்த்து, அதிகாரிகளிடம் விசாரணை நடத்திய பிறகு, கலாநிதி வீராசாமி எங்கள் வருகைக்குப் பின் தான் வந்தார் என்று தெரிந்து கொண்டார். மேலும், அவர் பெற்ற டோக்கன் எண்.8 என்று கூறி அவர்களை வெளியே செல்லுமாறு கூறிவிட்டு, எங்களை வேட்புமனுத் தாக்கல் செய்யுமாறு கூறினார்.

அதற்கு அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதற்கு வீடியோ பதிவு ஆதாரமாக உள்ளது. வேட்புமனுத் தாக்கலின் போது தேர்தல் சட்ட விதிமுறையை மீறி 5 பேர் மட்டும் செல்வதற்குப் பதிலாக 7 பேர் உள்ளே நுழைந்ததற்கும் வீடியோ ஆதாரம் உள்ளது.

எனவே அமைச்சர், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்கும், அரசு அலுவலர்களின் வேலையைச் செய்ய விடாமல் தடுத்ததற்கும் எங்கள் மீது தவறே இல்லாதபட்சத்தில் 2 மணி நேரம் காக்க வைத்து எங்களை மிரட்டியதற்கும், தகுந்த வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

ரூ.2 கோடி மதிப்பு சொத்து அபகரிப்பு

கணவன் – மனைவி கைது

● சென்னை

ராஜஸ்தானைச் சேர்ந்தவர் நிரஞ்சன். இவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாரில், “சென்னையில் எனது தந்தை பெயரில் ரூ.2 கோடி மதிப்பில் இடம் இருந்தது. அவர் காலமாகிவிட்டார். நான் தற்போது ராஜஸ்தானில் வசிக்கிறேன். எனது தந்தையின் சொத்தை பார்த்துக்கொள்ளும்படி எனது உறவினர்கள் சவுகார்பேட்டையில் வசித்துவரும் ரங்கோட் சிங் (47), அவரது மனைவி ஜந்தா தேவி (44) ஆகியோரிடம் தெரிவித்திருந்தோம். இவர்கள் ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலம் எங்களது சொத்தை அபகரித்து விட்டனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் தெரிவித்து இருந்தார்.

இதுகுறித்து மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து புகாருக்குள்ளான கணவன், மனைவியை கைது செய்தனர்.

ரயிலில் 10 கிலோ கஞ்சா கடத்திய

இளம் பெண் பிடிபட்டார்

● சென்னை

ஜார்க்கண்ட் மாநிலம் தன்பாத்தில் இருந்து விரைவு ரயில் நேற்று சென்னை சென்ட்ரல் நிலையம் வந்தது. அதில், வந்த ஓர் இளம் பெண்ணின் பையை ரயில்வே போலீஸார் சோதித்தபோது, அதில், ரூ.2 லட்சம் மதிப்புள்ள 10 கிலோ கஞ்சா பொட்டலங்கள் இருந்தன. தொடர்ந்து, நடத்தப்பட்ட விசாரணையில், அவர் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஜோதிகா தாஸ் (25) என்பது தெரியவந்தது. ஒடிசாவில் ஒரு பத்திரிகை செய்தியாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார்.

கைது செய்யப்பட்ட பெண்ணையும், கஞ்சா பொட்டலங்களையும் பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்க பிரிவு போலீஸாரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

சென்னையில் பல்வேறு இடங்களில் ஆவின் பால் விநியோகம் தாமதம்

பொதுமக்கள் பாதிப்பு

● சென்னை

ஒப்பந்த தொழிலாளர்கள் போராட்டம் காரணமாக, சென்னையில் 9 பகுதிகளில் ஆவின் பால் விநியோகம் நேற்று பாதிக்கப்பட்டது. இன்று வழக்கம்போல பால் விநியோகம் செய்யப்படும் என்று ஆவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் ஆவின் நிறுவனம் வாயிலாக 14.20 லட்சம் லிட்டர் ஆவின் பால் பாக்கெட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில், அம்பத்தூர் பால் பண்ணையில் 4.20 லட்சம் லிட்டர் பாக்கெட் பால் தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில், அம்பத்தூர் பால் பண்ணையில் லாரிகள் மூலமாக பால் விநியோகம் செய்யும் ஒப்பந்த ஊழியர்கள் போராட்டம் காரணமாக, ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டது.

பால் பண்ணையில் இருந்து லாரிகள் மூலமாக பால் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். லாரிகள் மூலமாக பால் விநியோகம் செய்யும் ஒப்பந்த நிறுவனத்துக்கு கொடுக்க வேண்டிய தொகையை குறைத்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அதாவது, பால் விநியோகம் செய்யும் வாகனங்களுக்கு டீசல் கட்டணத்தை ஆவின் நிறுவனம் குறைத்துள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஒப்பந்த தொழிலாளர்கள் நேற்று முன்தினம் இரவு திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, ஆவின் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதால் தீர்வு ஏற்பட்டது. இதன்பிறகு, போராட்டம் திரும்ப பெறப்பட்டது. இருப்பினும், சென்னை பெரம்பூர், அண்ணாநகர், அயனாவரம், வில்லிவாக்கம், கொரட்டூர், மயிலாப்பூர், வேளச்சேரி, தாம்பரம், அடையாறு ஆகிய பகுதிகளில் பால் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. காலை 6 மணிக்கு கிடைக்க வேண்டிய ஆவின் பால் 8 மணிக்கு தான் கிடைத்தது. இதனால், பொதுமக்கள் சிரமப்பட்டனர்.

இதுகுறித்து ஆவின் அதிகாரிகளிடம் கேட்டபோது, “பால் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் தனியார் வாகனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. டீசல் விலை உயரும் போது, அவர்களுக்கு கட்டணம் உயர்த்தி கொடுக்கப்படும். அதே போல, டீசல் விலை குறைக்கும்போது, கட்டணம் குறைக்கப்படும். தற்போது, டீசல் விலை குறைந்ததால், இதன் கட்டணம் குறைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். வியாழக்கிழமை முதல் வழக்கம்போல பால் விநியோகம் செய்யப்படும்” என்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ தவறுகளின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படப்புகைகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

கல்வி

பயிற்சி வகுப்புகள்

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Sai Janaranjini Chandrasekaran R/o No.3, Srinivasan Nagar Main Road, Ayappakkam, Chennai - 600077 have changed my minor daughter's name from Sai Sahana to Sai Sahana Sridharan.

I, Karthick R/o Old No 17, New No 7, Mmtc Colony, Nanganallur, Ch-61 have changed my minor daughter's name from Smrithi Viswanath to Smrithi Karthick Viswanath.

I Sheik Mehaboobe Karishma Sheik Abdul Rahman W/O, Manzoor Ilahi Shaik R/o B-7/103,adair Flats,akshaya Homes,omr,padur,tambaram 603103 Tamil Nadu have changed my name to Mehaboobe Karishma Sheik.

I, SANJANA ANIL KUMAR Mathur D/o Anil Kumar Mathur W/o Prem Kumar Viswanath R/o 4 (New No 3) Ground Floor, Crescent Street, Seethamma Colony, Teynampet, Chennai Tamil Nadu- 600018 have changed My name to SANJANA MATHUR

I, Prithiviraj Sagunthala Sivaranjini D/o.G.Prithiviraj, DOB: 11.11.2004 residing at No.356B, West Avenue, M.K.B. Nagar, Chennai-39 shall henceforth be known as P.SIVARANJINI - Prithiviraj Sagunthala Sivaranjini

SBI

பாரத ஸ்டேட் பாங்கு
திருவள்ளூர் கிளை - 00937
எண்.5, J.N.ரோடு, திருவள்ளூர் - 602001
மின்னஞ்சல்: sbi.00937@sbi.co.in

கடன்தாரர் / ஜாமீன்தாரர்களுக்கான அறிவிப்பு

ஐயா / அம்மையீர்,

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் (இனி “சட்டம்” என அழைக்கப்படும்) பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரருக்கு அறிவிப்பது என்னவென்றால் தங்களால் வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன் வசதிக்கான அசல் மற்றும் வட்டியையும் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள், எனவே அந்த **கடன் கணக்கு வாராக்கடன் (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளது** என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன்கீழ் வங்கிக்கு கடைசியாக தெரிந்த அனைவரின் முகவரிகளுக்கும் **18.03.2024** அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் அனைவருக்கும் அனுப்பப்பட்ட அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டது. எனவே இந்த பொது அறிவிப்பின் மூலம் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

வ.எண். 1: கடன்தாரர்: Mr. அன்பு S, S/o Mr. சுப்பிரமணி V, எண்.26 திருமலை நகர், கொரட்டூர், சென்னை 600080, **மேலும் முகவரி,** ப்ளாட் எண்.706, த வில்லேஜ் டவர் 3, காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் - 603110, **மேலும் முகவரி,** ப்ளாட் எண்.607, த வில்லேஜ் டவர் 3, காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் - 603110; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.1,28,29,349/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 40802750668 & 408027097466. NPA தேதி: 09.03.2024.**

அசையா சொத்துக்கள் விபரம்: ஷெட்யூல் 'A' சொத்து: ஐட்டம் எண்.1: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.225/3B, 226/1C,227, 229/1A, 241/2B3B, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14, **காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு** என்னும் முகவரியில் உள்ள மொத்த நிலத்தின் பரப்பு **ஏக்கர் 35.7483 சென்ட்.** எல்லைகள்: வடக்கு: சர்வே எண்கள்.223, 241(P), 231 (P), தெற்கு: சர்வே எண்கள்.229/2, 241(P), 228, 229/1B, கிழக்கு: சர்வே எண்.242, மேற்கு: ரோடு.

ஷெட்யூல் 'B' சொத்து: (விற்க ஒப்புக்கொண்ட பங்குகள்): மொத்தமுள்ள ஷெட்யூல் 'A' சொத்தில் **402.93 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு** நிலம், அதனுடன் உரிமைகள்.

ஷெட்யூல் 'B' சொத்து: (ஷெட்யூல்-C அப்பார்ட்மெண்ட்): அப்பார்ட்மெண்ட் எண்.706, 7வது தளம், டவர் '3'-ன் பரப்பு 1221 சதுர அடி குடியிருப்பு அப்பார்ட்மெண்ட், அதனுடன் அடித்தளம் / ஸ்டில் லெவல்-ல் ஒரு கார் பார்க்கிங்.

ஐட்டம் எண்.2: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.225/3B, 226/1C,227, 229/1A, 241/2B3B, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14, **காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு** என்னும் முகவரியில் உள்ள மொத்த நிலத்தின் பரப்பு **ஏக்கர் 35.7483 சென்ட். எல்லைகள்:** வடக்கு: சர்வே எண்கள்.223, 241(P), 231 (P), தெற்கு: சர்வே எண்கள்.229/2, 241(P), 228, 229/1B, கிழக்கு: சர்வே எண்.242, மேற்கு: ரோடு.

ஷெட்யூல் 'B' சொத்து: (விற்க ஒப்புக்கொண்ட பங்குகள்): மொத்தமுள்ள ஷெட்யூல் 'A' சொத்தில் **402.93 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு** நிலம், அதனுடன் உரிமைகள்.

ஷெட்யூல் 'B' சொத்து: (ஷெட்யூல்-C அப்பார்ட்மெண்ட்): அப்பார்ட்மெண்ட் எண்.607, 6வது தளம், டவர் '3'-ன் பரப்பு 1221 சதுர அடி குடியிருப்பு அப்பார்ட்மெண்ட், அதனுடன் அடித்தளம் / ஸ்டில் லெவல்-ல் ஒரு கார் பார்க்கிங்.

வ.எண்.2: கடன்தாரர்: Shri.J S கோட்டி, S/o.சுப்பிரமணி, மனை எண்.40, நடேசநகர் தெரு, கந்தசாமி நகர், மணவாள நகர், திருவள்ளூர் - 602002, **மேலும் முகவரி,** எண்.116, சேரன் தெரு, ஒண்டிகுப்பம், மணவாளநகர், திருவள்ளூர் - 602002; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.32,74,498/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 62313421413 (Home loan), 62460838117 (Home Top Up), 62313421548 (Suraksha). NPA தேதி: 18.03.2024.**

அசையா சொத்து விபரம்: மணவாள நகர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.290/8, தற்போதைய சர்வே எண்.290/8C மற்றும் பட்டா படி சர்வே எண்.290/8C5, திருவள்ளூர் மாவட்டம் & தாலுகா, **மனை எண்.40, நடேசநகர் தெரு, கந்தசாமி நகர், ஒண்டிகுப்பம், வெங்காத்தூர் கிராமம், மணவாளநகர், திருவள்ளூர் - 602002** என்னும் முகவரியில் **2170 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.41, தெற்கு: மனை எண்.39, கிழக்கு: சர்வே எண்.192, மேற்கு: 30 அடி லேஅவுட் ரோடு.

வ.எண்.3: கடன்தாரர்: Mr. குமரவேல் M, S/o.Mr.N.முருகேசன், 142/2 சச்சின் பாபு தெரு, நெடுகுத்தகை காலனி, திருநின்றவூர், திருவள்ளூர் 602024, **மேலும் முகவரி,** 25 கைலாசநாதர் கோயில் தெரு, திருமுருகன் நகர், திருநின்றவூர், EB அலுவலகம் அருகில், திருவள்ளூர் 602024; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.33,15,065/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 34002481372 (Home Loan), 35566962147 (Home Top Up), 35601009069 (Suraksha). NPA தேதி: 28.01.2024.**

அசையா சொத்து விபரம்: தென் சென்னை பதிவு மாவட்டம், ஆவடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.79/1, 79/3, 79/8, பழைய பட்டா எண்.5905 படி சர்வே எண்.79/40, புதிய பட்டா எண்.8469 படி சர்வே எண்.79/40A, **மனை எண்.25, கதவு எண்.25, திருமுருகன் நகர், கைலாசநாதர் கோயில் தெரு, திருநின்றவூர், திருநின்றவூர் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் மொத்தமுள்ள 1000 சதுர அடியில் **தென் மேற்கு மூலையில் 13 சதுர அடி தவிர 987 சதுர அடி நிலம், அதிலுள்ள 1500 சதுர அடி தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ராதிகா சொத்து (வடக்கு பக்க மனை எண்.25), தெற்கு: 20 அடி அகல ரோடு, கிழக்கு: மனை எண்.24, மேற்கு: 20 அடி அகல ரோடு.

வ.எண்.4: கடன்தாரர்: Mr.மனோஜ் குமார் P, S/o.Mr.பொன்னப்பன், எண்.11/336, கம்பர் இல்லம், சிவராமகிருஷ்ணன் நகர், ஐய்யப்பந்தாங்கல், கொளத்துவாஞ்சேரி, சென்னை - 600112 **மேலும் முகவரி,** மனை எண்.64, பிரபு அவென்யூ, கொளத்துவாஞ்சேரி கிராமம், சென்னை - 600112; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.31,67,944/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 39879312977. NPA தேதி: 28.01.2024.**

அசையா சொத்து விபரம்: ஷெட்யூல் 'A' சொத்து: தென் சென்னை பதிவு மாவட்டம், சைதாப்பேட்டை ஜாயிண்ட்-I சார் பதிவக சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.68, பட்டா எண்.1510, பட்டா படி சர்வே எண்.68/1B, 21.10.1991 தேதியிட்ட CMDA அனுமதி பெற்ற லேஅவுட் அனுமதி எண்.PPD/LO No 168/1991, **மனை எண்.64, "E.V.P.பிரபு அவென்யூ", கொளத்துவாஞ்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, தற்போது பல்லாவரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 33 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 35 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 74 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 70 அடி ஆகமொத்தம் **2448 சதுர அடி காலி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 30 அடி ரோடு, தெற்கு: சர்வே எண்.69-ல் உள்ள காலி நிலம், கிழக்கு: மனை எண்.63, மேற்கு: மனை எண்.65.

ஷெட்யூல் 'B' சொத்து (அடமான சொத்து): மொத்தமுள்ள ஷெட்யூல் A சொத்தில் **404 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் பொதுவான உரிமைகள்.

ஷெட்யூல் 'C' சொத்து (அடமான சொத்து): இரண்டாவது தளம், ப்ளாட் எண்.S-1-ன் பரப்பு 811 சதுர அடி ப்ளாட், அதனுடன் பொது இடம், கார் பார்க்கிங், 3 பேஸ் / மின்சார இணைப்பு. (29.03.2019 தேதியிட்ட கட்டிட அனுமதி எண்.0251/2019, D.Dis No 921/2019/A3)

வ.எண்.5: கடன்தாரர்: Mr. M பாரி மார்க்ஸ், S/o.Mr.முருகானந்தம், எண்.34 L/B, அம்மூர் ரோடு, மாரியப்பா நகர், ராணிப்பேட்டை, வேலூர், வேலூர் - 632401, **மேலும் முகவரி,** ப்ளாட் எண்.407, த வில்லேஜ் ஃப்ளோர் டவர் 3, காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் - 603110; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.63,98,561/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 40708627587. NPA தேதி: 09.01.2024.**

அசையா சொத்து விபரம்: ஷெட்யூல் 'A' சொத்து: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.225/3B, 226/1C,227, 229/1A, 241/2B3B, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14, **காலவாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு** என்னும் முகவரியில் உள்ள மொத்த நிலத்தின் பரப்பு **ஏக்கர் 35.7483 சென்ட்.** எல்லைகள்: வடக்கு: சர்வே எண்கள்.223, 241(P), 231 (P), தெற்கு: சர்வே எண்கள்.229/2, 241(P), 228, 229/1B, கிழக்கு: சர்வே எண்.242, மேற்கு: ரோடு.

ஷெட்யூல் 'B' சொத்து: (விற்க ஒப்புக்கொண்ட பங்குகள்): அப்பார்ட்மெண்ட் எண்.407, 4வது தளம், டவர் '3'-ன் பரப்பு 1221 சதுர அடி குடியிருப்பு அப்பார்ட்மெண்ட், அதனுடன் அடித்தளம் / ஸ்டில் லெவல்-ல் ஒரு கார் பார்க்கிங் இடம். மொத்தமுள்ள ஷெட்யூல் 'A' சொத்தில் **402.93 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் உரிமைகள்.

வ.எண்.6: கடன்தாரர்: Mr.E.ராஜேந்திரன், S/o.E.ஏழுமலை, AP 265, 11வது கிழக்கு குறுக்கு தெரு, MKB நகர், வியாசர்பாடி, சென்னை-600039 **மேலும் முகவரி,** அப்பார்ட்மெண்ட் எண்.D1F3, முதல் தளம், ப்ளாக் எண்.D2, சிங்காபூர், கடம்புதூர், திருவள்ளூர் மாவட்டம்; **கடன் நிலுவைத்தொகை : 18.03.2024 அன்றுள்ளபடி ரூ.2,39,213/-** மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட படி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். **Home Loan A/c Nos: 38418439045. NPA தேதி: 24.10.2022.**

அசையா சொத்து விபரம்: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், பேரம்பாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.26/7 (பகுதி) பட்டா படி சர்வே எண்.26